பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 15 புதன்கிழமை 27.04.2022 கதிர் 67

## சிற்றுண்டிகள் விலை மீண்டும் அதிகரிப்பு

சமையல் எரிவாயு விலை அதிகரிப்புக்கு அமைய, சிற்றுணவகங்களில் விலை அதிகரிப்பை மேற்கொள்வது குறித்த தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு அதன் உரிமையாளர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் 2

# இடைக்கால அரசுக்கு ஜனாதிபதி இணக்கம்

### சர்வகட்சிக் கூட்டத்துக்கும் அழைப்பு



நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் சர்வகட்சி இடைக்கால அரசை அமைப்பதற்குத் தான் இணங்குவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆளுங்கட்சியினருக்கு ஜனாதிபதி அதிகாரபூர்வமாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

புதிய பிரதமர், அமைச்சரவை உட்பட இதர விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆளும் தரப்புக் கட்சிக் கூட்டத்துக்கும்அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசில் நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கிலேயே, ஜனாதிபதியால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இடைக்கால அரசுக்கு ஆதரவு வழங்குங்கள்

### சஜித்திடம் தேரர்கள் கோரிக்கை



சர்வகட்சி இடைக்கால அரசு அமைப்பதற்கு வெளியில்இருந்தாவதுஒத்துழைப்பு வழங்குமாறு முக்கியமான தேரர்கள் சிலர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி பதவியில் கோட்டாபய ராஜபக்ஷ நீடிக்கும் வரை இடைக்கால அரசில் இணையத் 2

### போராடும் மக்களின் கோரிக்கைக்குச் செவிசாய்த்து

# கோட்டாபயவும் மஹிந்தவும் உடன் பதவி விலகவேண்டும்



*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதற்காகவே பிரதமர் மஹிந்த ராஜபக்சவைப் பதவி விலகுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் கோரி வருகின்றனர். ஒருவரை மட்டும் பதவி விலகக் கோரும் இந்தச் சுயலாப அரசியல் கோரிக்கை ஏற்கத்தக்கது அல்ல. வீதிகளில் இறங்கிப் போராடும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாட்டின் ஜனநாயகத்தைச் சீரழித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஒரே தடவையில் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.*

*- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தினார்.* 2

## பஸிலும் சஜித்தும் இரகசிய ஒப்பந்தம்

### வாசு குற்றச்சாட்டு



முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருக்கின்றது என அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற 2

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு அமெரிக்கத் தூதுவர் விஜயம்



யாழ்ப்பாணத்துக்குவருகை தந்துள்ள இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் இன்று காலை யாழ். பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின்போது, யூ.எஸ். எயிட் அனுசரணையுடன் யாழ். பல் கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தால் நடத்தப்படும் 2

## அரச ஊழியர்களின் சம்பளம் குறையாது

### நிதி அமைச்சு விளக்கம்

அரசஊழியர்களின்சம்பளத்தைக்குறைப்பது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அரச நிறுவனங்களுக்கான செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசேட 2

## மக்கள் தன்னெழுச்சியின் 19ஆவது நாள் இன்று



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை இராஜிநாமா செய்ய வேண்டும் உள்ளிட்ட ஜனநாயக மாற்றங்களைக் கோரி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் போராட்டத்தின் 19 ஆவது நாள் இன்றாகும். 2

## கௌரவமாக வெளியேறுக!

### பிரதமர் மஹிந்தவிடம் ரத்ன தேரர் கோரிக்கை

பதவி விலகமாட்டேன் என அடம் பிடிக்காமல், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கௌரவமாக வெளியேற வேண்டும்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார். 2

## மஹிந்தவுக்கு எதிரான அணியில் மஹிந்தானந்தவும் இணைந்தார்!



பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷவை நீக்குவதற்கான அணியில் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயும் இணைந்துகொண்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

அரசுக்குள் உருவாகியுள்ள புதிய அணிக்கு அவரே தலைமை வழங்கி வருகின்றார் எனவும், ஜனாதிபதி நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே அவர் செயற்படுகின்றார் எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன 2

## அரச ஊழியர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுற்றறிக்கை நிதி அமைச்சின் செயலாளரால் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமாதானமும், முரண்பாடுகளுக்கான தீர்வுகளும் என்ற முதுமாணிக் கற்கை நெறிக்கான அனுசரணையாளர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்கத் தூதுவர் முன்னிலையில் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தரும், யூ.எஸ். எயிட் நிறுவன அதிகாரிகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டனர்.

இதன்போது, பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், யூ.எஸ். எயிட் நிறு வன அதிகாரிகள் மற்றும் பல்கலைக் கழக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## பஸிலும் சஜித்தும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மூன்று வாரங்கள் வரை தாமதிப்பதற்குச் சஜித் பிரேமதாஸ இணங்கியுள்ளார்.

இந்த இணக்கப்பாட்டை ரணில் விக்கிரமசிங்கவின் ஊடாக அவர் நிறைவேற்றிக் கொண்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்து விலகுவதற்கு விருப்பம் தெரிவித்தபோதும், முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே அவரைத் தடுத்து நிறுத்தியுள்ளார்.

பஸில், சஜித்துடன் இருக்கின்ற இரகசிய ஒப்பந்தத்தின் மூலம் மஹிந்தவைக் காப்பாற்ற முயற்சிக்கின்றார் - என்றார்.

## கௌரவமாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
11 கட்சிகளின் கூட்டணிக்கும், சுயாதீன அணி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றிரவு நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே ரத்ன தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டு நலன் கருதி, பதவி விலகும் முடிவை பிரதமர் எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## மக்கள் தன்னெழுச்சியின் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் கட்சி சார்பற்ற இந்தப் போராட்டத்தில்பங்கேற்கும்மக்களின்எண்ணிக்கையில் தொய்வு ஏற்படவில்லை.

ஜனாதிபதி செயலகத்தின் பிரதான வாயிலை மறித்து மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கலைஞர்கள், தொழிற்சங்கத்தினர் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

கோட்டாகோகம என பெயரிடப்பட்டுள்ள பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மக்கள் போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இதனிடையே, மக்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கையின் மற்றுமொரு கட்டத்தை அலரி மாளிகைக்கு முன்பாக 'மைனா கோகம' என்ற பெயரில் ஆரம்பித்துள்ளனர்.

இந்தநிலையில், தாம் இராஜினாமா செய்யப்போவதில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அறிவித்திருந்தார்.

## மஹிந்தவுக்கு எதிரான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இதன்போது அரசு பதவிவிலக வேண்டும் என்ற யோசனை ஜனாதிபதியிடம் முன்வைக்கப்படவுள்ளது.

## கோட்டாபயவும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோட்டாபயவும் மஹிந்தவும் பதவி விலக வேண்டும் எனக் கோரியே ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும் அலரி மாளிகைக்கு முன்பாகவும் இரவு பகலாக மக்கள் போராடி வருகின்றனர். மக்கள் ஆணையின் பிரகாரம் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியும் பிரதமரும் மக்களின் இந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்க வேண்டும்.

காலம் தாழ்த்தாது கௌரவமாக இருவரும் பதவி விலகி புதிய ஆட்சிக்கு வழி விட வேண்டும். பிரதமர் மஹிந்தவை மட்டும் பதவி விலக்கி ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் இடைக்கால அரசு அமைந்தால் அதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மக்கள் போராட்டங்கள்தான் மேலும் வீரியமடையும்.

எனவே, மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாட்டின் ஜனநாயகத்தைச் சீரழித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் உடனடியாகப் பதவி விலக வேண்டும். இல்லையேல் பெரும் விளைவுகளை இருவரும் சந்திக்க வேண்டிவரும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் இரட்டை வேடத்தில் இருப்பதால் நாடாளுமன்றத்தில் பிரேரணைகள் மூலம் அரசையும் ராஜபக்ஷக்களையும் கவிழ்ப்பது எந்தளவுக்குச் சாத்தியம் என்று இப்போது சொல்ல முடியாது. எனினும், பிரேரணைகள் வாக்கெடுப்புக்கு வந்தால் ஆளும் - எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் உண்மை முகங்களை அறிந்துகொள்ள முடியும் - என்றார்.

## இடைக்கால அரசுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தயாரில்லை என்று சஜித் பிரேமதாஸ ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

எனினும், புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் இடைக்கால அரசு அமைப்பதற்கு தெற்கு அரசியலில் இணக்கம் காணப்பட்டுள்ளது. முக்கியமான தேரர்கள் சிலர் இதன் பின்னணியில் செயற்படுகின்றனர்.

அவர்களே சஜித்தைச் சந்தித்து, அவரின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளனர்.

## சிற்றுண்டிகள் விலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின்விலைஅதிகரிக்கப்பட்டுள்ளது.

2 ஆயிரத்து 675 ரூபாவாகக் காணப்பட்ட 12.5 கிலோகிராம் எடைகொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை, 2 ஆயிரத்து 185 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 12.5 கிலோகிராம் எடைகொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் புதிய விலை 4 ஆயிரத்து 860 ரூபாவாகும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

1,071 ரூபாவாக காணப்பட்ட 5 கிலோகிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு கொள்கலனின் விலை, 874 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, 1,945 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

506 ரூபாவாக இருந்த 2.3 கிலோகிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு கொள்கலனின் விலை, 404 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, 910 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, சமையல் எரிவாயு விலை அதிகரிப்புக்கு அமைய, சிற்றுணவகங்களில் விலை அதிகரிப்பை மேற்கொள்வது குறித்த தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு அதன் உரிமையாளர்களுக்கே வழங்குவதாக சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டமையால், தேநீர், பால் தேநீர், உணவுப்பொதி, அப்பம், பராட்டா, கொத்து உட்பட சிற்றுண்டிகளின் விலைகள் அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனாலும், உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டால், சிற்றுணவக தொழிற்துறை வீழ்ச்சியடையும். இது பாரிய பிரச்சினையாகும்.

எனவே, சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, தங்களது தொழிற்துறையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் தாங்கள் விரும்பியவாறு விலை அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு சிற்றுணவக உரிமையாளர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், தாங்கள் விலை அதிகரிப்பை மேற்கொண்டால், உண்மையில் இந்த தொழிற்துறை வீழ்ச்சியடையும் என சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்த கப்பலில் இருந்து தரையிறக்கப்பட்ட மூவாயிரத்து 900 மெட்ரிக் டன் சமையல் எரிவாயுவை விநியோகிக்கும் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படும் என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 3 ஆயிரத்து 700 மெட்ரிக் டன் எரிவாயு தாங்கிய மற்றுமொரு கப்பல் பெரும்பாலும் இன்று நாட்டை வந்தடையும் என லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த எரிவாயு அடுத்த மாத முற்பகுதியின் சில தினங்கள் வரையில் போதுமானதாகும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இடியப்ப சிக்கலாகும் அரசியல்

தனக்கு வந்த நெருக்கடியை வேறு தரப்புகள் மீது சுமத்தித் தன்னையும் தன் பதவியையும் காப்பாற்றிக் கொள்வதற்கு பகீரதப்பிரயத்தனம் செய்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அவரின் அரசு நிர்வாகத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட இலங்கை மக்கள் அவருக்கு எதிராக திரண்டு இருக்கின்றனர். அவரையும் அவரது அரசையும் வீட்டுக்கு அனுப்பும் சீற்றத்துடன் அவர்கள் ஒன்று சேர்ந்து குரல் எழுப்பி வருகின்றனர்.

இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காக தனது தமையனார் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசைப் பலிகடாவாக்க அவர் இணங்கி விட்டார்.

தமது மொட்டுக் கட்சிக் கூட்டணியில் இருந்த – இருக்கின்ற – கட்சிகளின் தலைவர்களுக்கு அவர் எழுதியுள்ள பிந்திய கடிதம் இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

மொட்டுக் கட்சிக் கூட்டணியில் இப்போது இருக்கின்ற தலைவர்களுக்கும், கூட்டணியிலிருந்து வெளியேறி சுயாதீனக் குழுக்களாக இயங்கப் போகின்றோம் என அறிவித்த குழுக்களின் தலைவர்களுக்கும் அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

அனைத்துக் கட்சிகளையும் சேர்த்து அரசு ஒன்றை அமைப்பது குறித்து ஆராய்ந்து முடிவு செய்வதற்காக நாளை மறுதினம் காலையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் கூட்டத்திற்கு வருமாறு அவர் கோரியுள்ளார்.

தற்போதைய பிரதமர் தலைமையிலான அரசு ராஜினாமா செய்ய, அந்த இடத்துக்கு அனைத்துக் கட்சி அரசு அமைக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது கடிதத்தில் கோடி காட்டியிருக்கிறார்.

தமக்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை இருக்கின்றது என்றும், அது இருக்கும் வரை தாம் தமது பதவியை விட்டு விலக மாட்டார் என்றும், தமக்கு அரசமைப்பு ரீதியான உரிமை அது என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார்.

"நான் ராஜினாமாச் செய்யமாட்டேன். அப்படிச் செய்வேன் என்று பயப்படாதீர்கள்!" – என்று முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் சங்கக் கூட்டத்தில் உறுதியாக அறிவித்திருக்கிறார் மஹிந்தர்.

ஆனால், பிரதமர் மஹிந்தவின் அரசு ராஜினாமாச் செய்ய அந்த இடத்திற்கு அனைத்துக் கட்சி அரசு அமைக்கப்படும், அது குறித்துப் பேச வாருங்கள் என்று தனது முன்னாள் மற்றும் இந்நாள் பங்காளிக் கட்சிகளை அழைக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய.

ஜனாதிபதி விரும்பினால் இருக்கும் பிரதமரை விட்டு விட்டு தமக்கு விரும்பிய ஒருவரைப் பிரதமராக அறிவித்து சத்தியப்பிரமாணம் செய்து வைக்க முடியும். ஆனால் அவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்று காட்ட வேண்டும். அந்த பெரும்பான்மை தம்மிடம் இருக்கின்றது என்கிறார் மஹிந்தர். அது அவருக்கு இல்லை என்பது நிரூபணமானால், புதிய அரசு – அது இடைக்கால அரசோ, சர்வகட்சி அரசோ. காபந்து அரசோ, தற்காலிக அரசோ எப்படியுமாகட்டும் – புதிதாக ஒன்றை ஜனாதிபதி நியமிக்க முடியும்.

ஆனால் பதவியில் இருக்கும் பிரதமர் பெரும்பான்மை தனக்கு இருப்பதாகக் கூறும் சமயத்தில், அது விடயத்தில் ஜனாதிபதிக்கு சந்தேகம் வருமானால் அந்த பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் நிரூபிக்குமாறு பிரதமரைப் பணிக்கலாம். அதை விடுத்து அவரை வீட்டுக்கு அனுப்பும் முடிவை ஜனாதிபதி தன்தான்தோன்றித்தனமாக எடுக்க முடியுமா? அவர் எடுப்பாரா? எடுத்தால் என்னவாகும்? புதிய சட்ட சிக்கல்கள் உருவாகுமா? விவகாரம் நீதிமன்றம் வரை போகுமா? – என்பவை எல்லாம் கேள்விகள்.

போகப்போக இலங்கையின் அரசியல் இவ்வாறு மேலும் நெருக்கடிக்குளாகலாம் . அது இடியப்ப சிக்கலாகும் என்பது கண்கூடு.

# பஸிலுடன் சஜித் அணி ஒப்பந்தம் செய்துள்ளது

## வாசுதேவ நாணயக்கார சாடல்



அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள தாமதம், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கத்துக்கு இடையிலான ஒப்பந்தமாக இருக்கலாம் என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தினார்.

எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளிப்பதற்குத் தயாராகி பல வாரங்கள் கடந்துவிட்டதாகவும் இப்போது அதைச் செய்வதற்கான உற்சாகம் அவர்களிடம் இல்லை என்றும் அவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

பஸில் ராஜபக்ஷவுடன் ஐக்கிய மக்கள் சக்தி ஒப்பந்தம் செய்துள்ளதா? என நாங்கள் சந்தேகிக்கிறோம். பெரும்பான்மை மக்களின் கோரிக்கையின்படி அரசாங்கத்தை வெளியேற்றி சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதில் தாமதம் ஏற்பட்டதன் பின்னணியில் சில இரகசியத் தன்மை இருக்கின்றது என நான் உணர்கிறேன்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி எந்த ஆர்வத்தையும் காட்டவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தற்போது அதற்கு எதிராகப் பேசுகிறார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் யார் பிரதமராக வருவார்கள் என்பது தொடர்பாக எங்களுக்கு கவலை இல்லை. ஆனால் இந்த அரசாங்கத்தை வெளியேற்றுவதே எங்களுக்கு விருப்பம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு 124 பேரின் ஆதரவு உள்ளதாம்!

## நிரூபித்துக் காட்டவும் தயார் என்கிறார் சாகர காரியவசம்




நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இன்னும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வசமே இருப்பதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை எந்த நேரத்திலும் நிரூபித்துக் காட்ட தயாராக இருக்கின்றேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

வேறு அணியினருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்குமாயின், ஊடக சந்திப்புகளை நடத்தி கதைகளை கூறாது அதனை நாடாளுமன்றத்தில் நிரூபித்து காட்ட வேண்டும் எனவும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் 124 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர் என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கூறியுள்ளார்.

அவர்கள் ஏற்கனவே பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கான தமது ஆதரவை எழுத்து மூலம் வழங்கி இருக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி, பிரேரணைக்கு ஆதரவளிக்க 113 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணங்கியுள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அத்துடன் அரசாங்கத்தில் இருந்து விலகி, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் 41 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்க இணங்கியுள்ளனர்.

மேலும் அரசாங்கத்தின் மீது அதிருப்தியில் இருக்கும் ஆளும் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தி கூறியிருந்தது.

# பாடசாலை அதிபரை இடமாற்றாதீர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்!



சுழிபுரம் – காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக்கூறி அந்தப் பாடசாலையின் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று (செவ்வாய்க்கிழமை) பாடசாலைக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதிபர் பாடசாலைக்கு வந்தது தொடக்கம் அவர் மாணவர்களது நலன்கள் மீது காட்டுகின்ற அக்கறை, மாணவர்கள் மீதான அணுகுமுறை மற்றும் பாடசாலையின் தலைமைத்துவம் என்பன சிறப்பாக காணப்படுவதால் அவரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக் கூறி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

கவனவீர்ப்பின் பின்னர் வலயக்கல்வி பணிமனைக்கு கடிதம் ஒன்று கையளிக்கப் போவதாகவும் ஐந்து நாள்களுக்குள் தகுந்த பதில் தராவிட்டால் பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்போம் எனவும் கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த அதிபர் பாடசாலைக்கு வந்த பின்னர் வரலாற்றில் முதல் தடவையாக மாணவர் ஒருவர் புலமை பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

புதன்கிழமை 27.04.2022

# ரஷ்ய அதிபருடன் ஐ.நா.பொதுச் செயலாளர் குட்டரஸ் சந்திப்பு மக்களை வெளியேற்ற ஒத்துழைப்பு தருவதாக புடின் உறுதி



ரஷ்ய படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ள மரியுபோல் நகரில் இரும்பு ஆலை ஒன்றில் தஞ்சம் அடைந்துள்ள பொதுமக்களை வெளியேற்றும் ஐ.நா.சபை மற்றும் செஞ்சிலுவை சங்கத்தின் முயற்சிக்கு ரஷ்ய அதிபர் புடின் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளார். ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் ஆண்டானியோ குட்டரஸ், நேற்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை மாஸ்கோவில் சந்தித்து பேசினார். அப்போது உக்ரைனில் மரியுபோல் நகரில் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்களை வெளியேற்ற உதவுமாறு குட்டரஸ் கேட்டுக் கொண்டார். இதற்கு கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ள புடின், உக்ரைன் நாட்டுக்கு எதிராக ரஷ்யா ஆதரவு பிரிவினைவாதிகள் போராடி வரும் டான்பாஸ் பிராந்திய பிரச்சினைகளில் முடிவு எட்டப்படாமல் பாதுகாப்பு உத்தரவாதத்தில் கையெழுத்திட முடியாது என்று திட்டவட்டமாக கூறியுள்ளார்.

உக்ரைன் உடனான பேச்சுவார்த்தை சாதகமான பலனை தரும் என்று தாம் நம்புவதாகவும் புடின் தெரிவித்துள்ளார். மரியுபோல் நகரத்தில் இருந்து பொது மக்களை மீட்க ஒத்துழைப்புத் தருவதாக புதின் உறுதி அளித்துள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகளை சர்வதேச செஞ்சிலுவை தீவிரப்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் ரஷ்யாவின் தாக்குதலில் காயம் அடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் சிறுவர், சிறுமிகளை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி நேற்று நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். அப்போது அவர்களுக்கு ஆப்பிள் ஐபாட்களை வழங்கிய ஜெலன்ஸ்கி விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்கிறார் எனக் கூறினார்.




# ஊழல் வழக்கில் ஆங்சான் சூகி குற்றவாளி என மியான்மர் ராணுவ நீதிமன்றம் தீர்ப்பு



ஊழல் வழக்கில் ஆங்சான் சூகி குற்றவாளி என மியான்மர் ராணுவ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. தங்கம் மற்றும் பல ஆயிரம் டாலர்கள் லஞ்சமாக பெற்றதாக ஆங்சான் சூகிக்கு எதிராக ராணுவ நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

# எலான் மஸ்க் வாங்கிய பிறகு டிவிட்டர் ஊழியர்கள் வேலை பறிக்கப்படுமா?; சி.இ.ஓ. பராக் அகர்வால் கவலை


டெஸ்லாவின் முதன்மை செயல் அதிகாரி மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனரான எலான் மஸ்க், பிரபல சமூக வலைதளமான டுவிட்டரை ரூ.3.3 லட்சம் கோடி தந்து வாங்க ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால், எப்போது அதிகாரபூர்வமாக தொகை பரிமாற்றம் நடக்கும், மஸ்க் வாங்கிய பிறகு டுவிட்டர் நிறுவனத்தை வழிநடத்த போவது யார்? என்பன போன்ற விவரங்கள் வெளியாகவில்லை. தற்போது, டிவிட்டர் நிறுவனத்தை இந்தியரான பராக் அகர்வால் வழிநடத்தி வருகிறார்.

இந்நிலையில், டிவிட்டர் ஊழியர்களிடம் பராக் அகர்வால் நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது, 'ரூ.3.36 லட்சம் கோடி தருவதாக மஸ்க் கூறியதாக நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. டுவிட்டர் நிறுவனத்துடனான ஒப்பந்தம் முடிந்து மஸ்கிடம் கைமாறிய பிறகு, இந்த நிறுவனம் எந்த திசையில் செல்லும் என்று எனக்குத் தெரியாது.

என்ன நடக்கிறது என்பதைப் பற்றி உங்கள் அனைவருக்கும் பலவித மான உணர்வுகள் உள்ளன. ஒப்பந்தம் முடிவதற்கு மூன்று முதல் ஆறு மாதங்கள் ஆகலாம்.

இந்த தருணத்தில், எப்போதும் போலவே டுவிட்டரை இயக்குகிறோம்,' என்றார்.

டுவிட்டர் நிறுவனத்தில் மாற்றம் தேவை என்ற மஸ்க் ஏற்கனவே கூறியுள்ளார். இதனால், மஸ்க்கின் கைக்கு டுவிட்டர் சென்றால், ஊழியர்கள் வேலை பறிபோகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. டுவிட்டர் நிறுவனத்தை வழிநடத்த யார் புதிதாக தேர்வு செய்யப்படுவார்? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இருப்பினும், ஒப்பந்தம் முழுமையாக முடியும் வரை சி.இ.ஓ. பொறுப்பில் பராக் அகர்வால் தொடர்வார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளது.



## அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிசுக்கு கொரோனா தொற்று உறுதி

அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிசுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நோய் அறிகுறிகள் இல்லாததால் மருத்துவர்கள் அறிவுரைப்படி தனிமை படுத்திக்கொண்டதாக கமலா ஹாரிஸ் டுவிட்டரில் தகவல் தெரிவித்துள்ளார்.



# கராச்சி பல்கலையில் குண்டுவெடிப்பு 3 சீனர்கள் உள்பட 4 பேர் சாவு: மனிதகுண்டு தாக்குதல் எனச் சந்தேகம்

பாகிஸ்தானின் கராச்சி பல்கலைக் கழக வளாகத்தில் நடந்த குண்டுவெடிப்பில் சீனாவைச் சேர்ந்த 3 பேர் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர். பாகிஸ்தானில் உள்ள கராச்சி பல்கலைக் கழகத்தில் சீன மொழியை பயிற்றுவிக்கும் கன்பூஷியஸ் நிறுவனக் கட்டடத்தின் அருகே நிறுத்தப்பட்டிருந்த வானில் இருந்த வெடிகுண்டுகள் திடீரென வெடித்ததில் 4 பேர் பலியாகினர்.

வானுக்கு அருகில் நின்றிருந்த அதிகாரிகள் 4 பேர் உள்பட பலர் காயமடைந்தனர்.

இதில், கன்பூஷியஸ் நிறுவன இயக்குநர் ஹுவாங் குய்பிங், டிங் முபெங், சென்சா உள்ளிட்ட 3 சீனர்கள் பலியாகினர். இவர்களில் 2 பேர் பெண்கள். சீனர்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, பலுசிஸ்தான் பிரிவினைவாதிகள் கடந்த சில மாதங்களாக பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் பணிபுரியும் சீனர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகின்றனர். அந்த வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கலாம் என்று பாகிஸ்தான் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

முதல் கட்டமாக பல்கலை. நுழைவு வாயில் அருகே வேன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சி.சி.டி.வி . காட்சிகளை ஆய்வு செய்து வருவதாக பாகிஸ்தான் காவல்துறை தெரிவித்தது. சம்பவ இடத்துக்கு வந்த தீவிரவாத ஒழிப்பு படையினர் அப்பகுதியை சுற்றி வளைத்து, மீட்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டனர். இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிர் இழந்தவர்களுக்கு பாகிஸ்தான் பிரதமர் பொஸ் ஷெரீப் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

# டிவிட்டர் கணக்கில் இருந்து விலகுவதாக ஹாலிவுட் நடிகை ஜமீலா ஜமில் அறிவிப்பு

எலன் மஸ்க் டிவிட்டர் நிறுவனத்தை வாங்கியதை அடுத்து தனது டுவிட்டர் கணக்கில் இருந்து விலகுவதாக ஹாலிவுட் நடிகை ஜமீலா ஜமில் அறிவித்துள்ளார். நாயுடன் இருக்கும் புகைப்படத்தை பகிர்ந்து இதுவே எனது கடைசி டுவீட் என தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சாய்ந்தமருது குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு மரபணுச் சோதனை!







(பாறுக் ஷிஹான்)

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதலை தொடர்ந்து அம்பாறை சாய்ந்தமருது பகுதியில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் டி.என்.ஏ. பரிசோதனைக்காக இன்று புதன்கிழமை காலை அம்பாறை புத்தங்கல பொது மயானத்தில் தோண்டி எடுக்கப்பட்டு வருகின்றன.

மூன்றாவது தடவையாக மேற்கொள்ளப்படவுள்ள இப்பிரேத பரிசோதனையானது அம்பாறை பிரதான மாவட்ட நீதிபதி மற்றும் நீதிவானுமாகிய லுசாகா குமாரி தர்மகீர்த்தி முன்னிலையில் சட்ட வைத்திய அதிகாரிகளான என்.டபிள்யு.யு. தினுகா மதுசானி மற்றும் ருச்சிர நதீர ஆகியோருடன் இரசாயன பகுப்பாய்வாளர் வனிதா பண்டாரநாயக்க, தடயவியல் பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பிரசன்னத்துடன் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

கட்டுவாபிட்டிய தேவாலயத்தில் தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரியின் மனைவி புலஸ்தினி மகேந்திரன் (சாரா ஜெஸ்மின்) என்பவர் தொடர்பான மரபணுப் பரிசோதனைக்காக சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸ் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

சம்பவ இடத்திற்கு அருகில் ஊடக அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈஸ்டர் தொடர் தாக்குதல்களின் பிரதான சந்தேக நபரான சஹ்ரான் ஹசீமின் சகோதரரால் 26.04.2019 இரவு சாய்ந்தமருது பகுதியில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் தொடர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் சாரா ஜஸ்மின் இறந்தார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சாரா தொடர்பான மர்மங்கள் நீடித்து வரும் நிலையில் அவர் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.சாராவை அடையாளம் காண உடல் உறுப்புகள் டிஎன்ஏ சோதனைக்கு உட்படுத்தப்படுவது இது மூன்றாவது முறையாகும் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்கள் என வெளியிடப்பட்ட பெயர்களின் விவரங்கள் பின்வருமாறு:-

* முஹமட் ஹாசீம் முகமட் றில்வான் (முகமட் ஹாசீம் முகமட் சஹ்ரானின் சகோதரர்)
* முகமட் நஸார் பாத்திமா நப்னா (முஹமட் ஹாசீம் முகமட் றில்வானின் மனைவி)
* முஹமட் ஹாசீம் முகமட் ஜெய்னி/முகமட் சின்னா மௌலவி( முஹமட் ஹாசீம் முகமட் சஹ்ரானின் சகோதரர்)
* ஆதம்லெப்பை பாத்திமா அப்ரீன் ( முஹமட் ஹாசீம் முகமட் ஜெய்னியின் மனைவி)
* ஹயாது முஹமட் ஹாசீம் (முஹமட் ஹாசீம் முகமட் சஹ்ரானின் தந்தை)
* அப்துல் சத்தார் சித்தி உம்மா( முஹமட் ஹாசீம் முகமட் சஹ்ரானின் தாய்)
* முகமட் ஹாசீம் ஹிதாயா( முஹமட் ஹாசீம் முகமட் சஹ்ரானின் சகோதரி)
* இப்றாகிம்லெப்பை முஹமட் றிசாட் (முஹமட் ஹாசீம் முகமட் றில்வானின் மைத்துனரும் முகமட் ஹாசீம் ஹிதாயாவின் கணவர்)
* அப்துல் ரஹீம் பிரோஸா (சியோன் தேவாலய தற்கொலை குண்டுதாரி ஆசாத்தின் மனைவி)
* மகேந்திரன் புலஸ்தினி/சாரா ஜெஸ்மி (நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலய தற்கொலை குண்டுதாரி முகமட் ஹஸ்தூன் என்பவரின் மனைவி)
* அகமதுலெப்பை முகமட் நியாஸ்(தேசிய தௌஹீத் ஜமாத் பிரதான உறுப்பினர்)
* முகமட் றில்வான் மீரா (முஹமட் ஹாசீம் முகமட் றில்வானின் மகள்)
* முகமட் றில்வான் மருவான் சஹீட் ( முஹமட் ஹாசீம் முகமட் றில்வானின் மகன்)
* முகமட் ஜெய்னி அமாயா( முஹமட் ஹாசீம் முகமட் ஜெய்னியின் மகள்)
* முகமட் இமாம் ஹாசிம்(முஹமட் ஹாசீம் முகமட் ஜெய்னியின் மகன்)
* முகமட் சஹ்ரான் வாசீட் (முஹமட் ஹாசீம் முகமட் சஹ்ரானின் மகன்)

மற்றுமொரு சடலம் இனங்காணப்படவில்லை

இது தவிர இந்த தாக்குதலில் காயமடைந்தவர்கள்:-

* முகமட் சஹ்ரான் ருசைதா ( முஹமட் ஹாசீம் முகமட் சஹ்ரானின் மகள்)
* அப்துல் காதர் பாத்திமா ஹாதியா/சித்தியா( முஹமட் ஹாசீம் முகமட் சஹ்ரானின் மனைவி)

சாய்ந்தமருது தற்கொலை தாக்குதல் இடம்பெற்று கடந்த 26.04.2022 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதன்போது கொல்லப்பட்டவர்களினுடையவை எனக் கூறப்படும் 17 பேரின் உடற் பாகங்களையும் குடும்ப உறுப்பினர்களின் மரபணு பரிசோதனை அறிக்கைகளை கொண்டு பகுப்பாய்வு செய்ததில் சந்தேகத்திற்கிடமாக தேடப்படும் சாரா எனப்படும் புலஸ்தினி மகேந்திரன் என்பவரின் மரபணு பரிசோதனை அறிக்கை பொருந்தவில்லை என தெரிவிக்கப்பட்டதை அடுத்து சாரா என்றழைக்கப்படும் புலஸ்தினி மகேந்திரனின் மரபணுபரிசோதனை அறிக்கை அறிய இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீண்டும் சாரா என்ற புலஸ்தினி தப்பிச் சென்றுள்ளாரா என சந்தேகம் எழுப்பப்பட்டு சர்ச்சைகள் நாளுக்கு நாள் நீடிக்கின்றன.

கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஏப்ரல் 21 நடைபெற்ற பின்னர் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம பகுதியில் மேற்படி தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இதன்போது குறித்த பகுதி வீடு ஒன்றில் வாடகைக்கு குடியிருந்த சஹ்ரான் ஹசீமின் தம்பி உட்பட பலரும் கொல்லப்பட்டிருந்தனர்.மேலும் சஹ்ரான் ஹசீமின் மனைவி மற்றும் அவரது மகள் உயிருடன் இராணுவத்தினரால் மீட்கப்பட்டிருந்தனர்.

இதனை அடுத்து இச்சம்பவம் தொடர்பில் நீதிமன்றங்களில் தொடர்ச்சியாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக மரபணு மீள் பரிசோதனை நடைபெறுகின்றது.

# விபுலானந்தா கற்கைகள் நிறுவகத்தில் புதிதாகச் சான்றிதழ் கற்கை நெறிகள்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் புதிய சான்றிதழ் கற்கை நெறிகளின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கெனடி தலைமையில் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்புல தொழில்நுட்பத்துறை தலைவர் கலாநிதி.சு.சிவரெத்தினம், நடன, நாடகத்துறை தலைவர் கலாநிதி தக்ஷாயினி பரமதேவன், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பிரதிபதிவாளர் து.விஜயகுமார் மற்றும் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள், போதனா ஆசிரியர்கள், வளவாளர்கள், கற்கை நெறிகளில் பங்குபற்றும் மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நாடகத்துறை, நடனத்துறை மற்றும் சங்கீதத்துறை சார் சான்றிதழ் கற்கை நெறிகளே இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டன. இக்கற்கை நெறிகளுக்கு வயதெல்லை இல்லை. உள்வாரி, வெளிவாரி என்ற தெரிவு இல்லாமல் கற்பதற்கான வாய்ப்புக்களை எதிர்பார்க்கும் அனைத்து மாணவர்களுக்கும் இச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு கல்லடியில் இறையிறக்கப் பெருவிழா



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கத்தோலிக்கர்களின் சிறப்பு விழாக்களில் ஒன்றான இறையிறக்கத்தின் பெருவிழா ஞாயிறன்று கொண்டாடப்பட்டது.

2000 ஆம் ஆண்டுக்கு முன் புனித பட்டம் பெற்ற துறவரசபை துறவி பவுஸ்தீனாவுக்கு 1930 ஆம் ஆண்டு 14 முறை இருதய ஆண்டவர் காட்சி அளிக்கப்பட்டதாக நிரூபிக்கப்பட்டதன் காரணமாக திருத்தந்தை 2 ஆம் நோயல் ஜோன் போல் உயிர்த்த காலத்தின் 2 ஆவது ஞாயிறு தினத்தை இறையிறக்க ஞாயிறு தினமாக பிரகடனப்படுத்தினார் எனக் கூறப்பட்டு கத்தோலிக்க திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டு உயிர்த்த காலத்தின் இரண்டாவது ஞாயிறு தினம் இறையிறக்க ஞாயிறு தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இறையிறக்க பெருவிழாவை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட திரு இருதய நாதர் திருச்சுரூபம் மக்கள் வழிபாட்டுக்காக ஆசீர்வதிக்கப்பட்டு, விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அருட்தந்தை சுவைக்கீன் ரொஷான் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற விசேட திருப்பலியில் பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார், அருட்பணி ஜேம்ஸ் அடிகளார் இணைந்து திருப்பலியினை ஒப்புக்கொடுத்தனர்.

இந்த விசேட திருப்பலியில் கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய பங்குமக்கள் மற்றும் அயல் பங்கு மக்களென அதிகளவிலான பக்தர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# மாகாண சபை உறுப்பினர்கள் சங்கம் பிரதமர் பதவி விலகக்கூடாதென முடிவு!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது அரசாங்கமோ பதவி விலகக் கூடாது என மாகாண சபை உறுப்பினர்கள் சங்கத்தினர் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர்.

பிரதமர், அரசாங்கத்தின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் சங்கத்தினருக்கு இடையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்கமைய இந்தத் தீர்மானம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவிப்பதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் பிரதமராக கடமையாற்றுவது அத்தியாவசியமானது என மாகாண சபை உறுப்பினர்கள் சங்க உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரையும் படங்களையும் பயன்படுத்தி மக்கள் மத்திக்கு சென்று நாடாளுமன்றம் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிராக சுயாதீனமாக செயற்படுகின்றமை நெறிமுறைக்கு புறம்பானது எனவும் மாகாண சபை உறுப்பினர்கள் சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

69 லட்சம் பெரும்பான்மை மக்கள் இன்னமும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இருக்கின்றனர் எனவும், அவர்களது மௌனம் காரணமாக சிறு குழுவின் போராட்டத்திற்கு சமூக ஊடகங்களாலும் பிரதான ஊடகங்களாலும் விளம்பரம் கிடைத்தமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் போராட்டங்கள், எதிர்க்கட்சிகள் மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான பல அரசியல் அமைப்புகளால் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களை தூண்டிவிட்டு செயற்படுத்தும் ஒன்று என சுட்டிக்காட்டிய பிரதிநிதிகள், இந்தப் போராட்டத்தில் தீவிரவாத சக்திகள், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் நாட்டை சீர்குலைக்க எதிர்பார்க்கும் வெளிநாட்டு சக்திகள் செயற்படுகின்றன எனவும் கூறப்பட்டது.



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு நாட்டை வழிநடத்திய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அவர் இல்லாவிட்டால் இன்று இவ்வாறான போராட்டங்களை நடத்துவதற்கான சூழல் உருவாகியிருக்காது என்றும் அவர்கள் நினைவு கூர்ந்தனர்.

குறித்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கொழும்பு பங்குச் சந்தை பரிமாற்றங்களில் வீழ்ச்சி!

கொழும்பு பங்குச் சந்தை, நேற்று தமது வர்த்தக நடவடிக்கைகளை இரண்டு தடவைகள் இடைநிறுத்தியது

நேற்றைய நாளுடன் ஒப்பிடுகையில், எஸ்.ஈ.பி. எஸ்.எல். 20 சுட்டெண் 7.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இந்த இடைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

முற்பகல் 11.02 மணி முதல் 11.07 மணி வரை ஐந்து நிமிடங்களுக்கு சந்தை மூடப்பட்டது.

முன்னதாக பங்கு சந்தை முற்பகல் 10.31 முதல் 11.01 வரை இடைநிறுத்தப்பட்டது.

இதனையடுத்து முற்பகல் 11.07 மணி முதல் 11.32 மணி வரை 25 நிமிடங்களுக்கு ஏல அமர்வு நடத்தப்பட்டது.

வர்த்தகம் நிறுத்தப்பட்ட நேரத்தில், எஸ்.ஈ.பி. எஸ்.எல். 20 குறியீடு 209.16 புள்ளிகள் (8.88வீத) சரிந்து 2,146.38 ஆகவும், அனைத்து பங்கு விலைக் குறியீடு 548.50 புள்ளிகள் (7.30 வீத) சரிந்து 6,965.35 ஆகவும் இருந்தன.

## பல குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தில் ஒருவர் கைது!

கொள்ளை உட்பட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்காக தேடப்பட்டு வந்த சந்தேக நபரொருவர் சீகிரியா பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சீகிரியா – பொத்தானை சந்தியில் குறித்தநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கலேவெல – மொரொத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதான நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து தொரட்டியாவ பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொள்ளையிடப்பட்ட மோட்டார்சைக்கிளொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் வேறு பிரதேசங்களில் குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்காக குறித்த நபர் மீது பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சீகிரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## இடைக்கால அரசாங்கத்தில் பங்கேற்பதைவிட அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதே சிறந்தது

### சஜித் திட்டவட்ட அறிவிப்பு

இடைக்கால அரசாங்கத்தை அமைத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பதை விட அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதே சிறந்தது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் கண்டியில் இருந்து கொழும்பு வரையிலான பேரணியில் கலந்து கொள்வதற்கு முன்னர் அஸ்கிரிய மகாநாயக்கர் வரகாகொட ஞானரதன தேரரை பார்வையிட்டதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

தற்போதைய நாடாளுமன்றத்தின் அமைப்பு எப்படி உருவானது என்பதை நாம் பார்க்க வேண்டும். 69 லட்சம் மக்களின் விருப்பத்தால் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அறுபத்தொன்பது லட்சம் மக்கள் அரசாங்கத்துக்கு 140 இடங்களுக்கு மேல் கொடுத்துள்ளனர்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் முற்றாக மறந்துவிடும் வேலைத்திட்டம் இது. நம்பிக்கையில்லாப் பிரேரணை அல்லது பதவி நீக்கம் என்பது வேறு அரசுகளை உருவாக்குவது வேறு.

இளைஞர்கள், சிவில் சமூகங்கள் மற்றும் முதியோர்கள் காலி முகத்திடலிலும் நாட்டின் பல பகுதிகளிலும் ஒன்று கூடி ஜனாதிபதி மற்றும் பிரதமரை அரசாங்கத்தை விட்டு வெளியேறுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். திருடர்களைப் பிடி என்கிறார்கள். கொள்ளையடித்த பணத்தைத் திரும்பப் பெறச் சொல்கிறார்கள்.



ஒப்பந்தங்களால் அல்ல, மக்கள் ஆணையின் மூலம் நாட்டைக் கைப்பற்ற நாங்கள் தயாராக உள்ளோம். மக்களுக்கு பிரச்சினை என்று அமைச்சர்கள் பேரம் பேசுவது சரியா? இடைக்கால அரசுகளால் திருடர்களை பிடிக்க முடியுமா? இடைக்கால அரசாங்கம் திருடாதவர்களையும் திருட வைக்கும்.

எங்கள் கட்சிக்கு பேச்சு சுதந்திரம் உள்ளது. இது ஐ.தே.க அல்ல. மக்களைக் கண்டித்து வாயடைக்க நாங்கள் தயாரில்லை. இதுவே எமது கட்சியின் கொள்கை. இது மாறாது. மாற விரும்புபவர்களுக்கு வாய்ப்பு உண்டு. இறுதியில் நீதிமன்றத்தை நாட வேண்டியதுதான் என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும். மக்கள் போராட்டத்தை ஏலம் விட நான் தயாராக இல்லை.

எரிவாயு, எரிபொருள் மற்றும் பால் வாக்கெடுப்பை அகற்ற இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படுமா? இந்த நாட்டில் இருள் மறைந்து வருகின்ற போதிலும் இவை அனைத்தும் சந்தர்ப்பவாத அரசியல் கதைகள்' என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## ரயில் சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதமடையும் ரயில்வே ஒன்றிணைந்த சேவைசங்கம் எச்சரிக்கை!

அரசாங்கத்துக்கு எதிராக தீவிரமடைந்துள்ள போராட்டத்தை பலப்படுத்தும் வகையிலும், ஜனாதிபதி உட்பட முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்பதற்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையிலும் இன்று (புதன்கிழமை) நள்ளிரவு முதல் 24 மணிநேர பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளோம்.

நாளை (வியாழக்கிழமை) ரயில் சேவை முழுமையாக ஸ்தம்பிதமடையும் என ரயில்வே ஒன்றிணைந்த சேவை சங்கத்தின் செயலாளர் எஸ்.பிஃவிதானகே தெரிவித்தார்.

பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் ரயில் சேவையை பயன்படுத்தும் பொதுப்பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

நாட்டுக்காக ஒருசில கடினமான தீர்மானங்களை முன்னெடுக்க நேரிடும். நாட்டுக்கான எமது போராட்டத்துக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மருதானையில் உள்ள ரயில்வே ஒன்றிணைந்த சேவை சங்கத்தின் காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தின் விளைவை நாட்டு மக்கள் தற்போது எதிர்கொள்கிறார்கள்.

வரிசையில் நின்று அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை தற்போது தோற்றம் பெற்றுள்ளது. மக்களாணைக்கு முரணாக செயற்பட்டதன் காரணமாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட அரசாங்கத்தை நாட்டு மக்கள் முழுமையாகப் புறக்கணிக்கிறார்கள்.

ரயில்வேத் தொழிற்சங்கங்கள் பல்வேறு அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக உள்ளார்கள். இருப்பினும் தற்போது அரசியலுக்கு முன்னுரிமை வழங்க முடியாது.

நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து காலி முகத்திடலில் இளைஞர்கள் பல நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் தொழிற்சங்கங்களும் அவர்களின் போராட்டத்துக்கு அரசியல் நோக்கமற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தீர்மானித்து பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

இன்று (புதன்கிழமை) நள்ளிரவு நாளை (வியாழக்கிழமை) நள்ளிரவு வரை ரயில் சேவை முழுமையாக ஸ்தம்பிதமடையும். ரயில் சேவையில் ஈடுபடும் 30 தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதால் ரயில் சேவை பகுதி அளவில் கூட முன்னெடுக்கப்படமாட்டாது.

ரயில் சேவை ஸ்தம்பிதமடைவதால் பொதுப் பயணிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நன்கு விளங்கிக் கொள்ள முடிகிறது. தொழில் உரிமைகளுக்காகப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவில்லை. அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். எமது போராட்டத்துக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.04.2022இல் வெளியிடப்பெற்றது.